# திருவரங்கத்தமுதனார்
# அருளிச் செய்த ப்ரபந்ந காயத்ரி என்னும்
# இராமானுச நூற்றந்தாதி




**பாசுரம்-24**

மொய்த்த வெந்தீவினையால் பல்லுடல்தோறும் மூத்து*அதனால்
எய்த்தொழிந்தேன் முனநாள்களெல்லாம்* இன்று கண்டுயர்ந்தேன்
பொய்த்தவம் போற்றும் புலைச்சமயங்கள் நிலத்தவியக்
கைத்த மெய்ஞ்ஞானத்து*இராமானுசன் என்னும் கார் தன்னையே.

**பாசுரக் கருத்து**

நான் அநாதி காலம் ஸம்ஸாரத்திலேயே உழன்று, நெஞ்சத்தில், சப்தாதி(உலக)விஷயங்களுக்கே இடம் கொடுத்து வஞ்சகனாகவே இருந்த அந்நிலையிலேயே, எம்பெருமானாரை வைப்பாயவான் பொருளாக வஞ்ச நெஞ்சில் வைத்து, முப்போதும் வாழ்த்துவதாக நடித்தேன். நெஞ்சில் வைத்ததும்,வாழ்த்தியதும், பொய்யேயாயினும், எம்பெருமானார் தன் வண்மையினால், இந்நிலையை உண்மை நிலையாக்கிவிட்டார். அவர் காட்டக் கண்ட நான், இப்பொழுது உயர்ந்தவனாகிவிட்டேன் என்கிறார்.

**பதவுரை**

**இராமானுசன் என்னும் கார் தன்னையே:**
மேகம் நீர், நிலம் என்று பாராது, மழை பொழிவதுபோல, எம்பெருமானார் தகுதி பாராது, தம் வண்மையினால் தமக்கு உபகரிப்பதைக் கூறுவதால் இவர் கண்டமை, அவர் காட்டி உபகரித்தாகும் என்று கொள்ளல் வேண்டும்.

**பாசுர அர்த்தம்**

கீழ்க்கழிந்த காலமெல்லாம், ஆன்மாவை மொய்த்துக் கொண்டிருந்த, கொடிய பாபத்தால், பலபல சரீரங்கள் தோறும் முதுமையடைந்து, அத்தாலே களைத்துப் போய்விட்டேன். பொய்யான தவங்களை ஆதரிக்கும் நீச மதங்கள், இவ்வுலகத்திலே அழியும்படி நிரஸித்தருளின உண்மை ஞானமுடையவரான எம்பெருமானாராகிற காளமேகத்தை இன்று அடியேன் சேவிக்கப் பெற்று, சிறந்தவனானேன்.

**பாசுரம்-25**



காரேய் கருணை இராமானுச! இக்கடலிடத்தில்
ஆரேயறிபவர் நின்னருளின் தன்மை?* அல்லலுக்கு
நேரேயுறைவிடம் நான் வந்து நீயென்னையுய்த்தபின் உன்
சீரேயுயிர்க்குயிராய்* அடியேற்கு இன்று தித்திக்குமே.

**பாசுரக் கருத்து**

**தனக்குப் பண்ணின உபகாரத்தை நினைந்து, நேரே எம்பெருமானாரை நோக்கி, தேவரீருடைய அருளின் திறத்தை, இவ்வுலகில் யார்தானறிவார்? என்கிறார்.**

**பதவுரை**

**வந்து நீ என்னை உய்த்த பின்:**

முதலை வாய்ப்பட்டுக் கஜேந்திரன் துயருறுமிடத்துக்கு, எம்பெருமான் வந்து, அந்த துயரைத் தீர்த்து அருளியது போல, நான் இருந்து அல்லலுறும் இடத்துக்கு, எனக்காக தேவரீர் எழுந்தருளி, என் அல்லலைத் தீர்த்து அருளினீர் என்கிறார்.

| கஜேந்திரனுக்கு எம்பெருமான் அருளியது | அடியேனுக்கு எம்பெருமானார் அருளியது |
| --- | --- |
| 1.அவன் கதறிய போது | 1. கதறவும் தெரியாத துன்ப காலத்தில் |

| | |
|---|---|
| 2. கஜேந்திரன் துயருற்றது ஒரு மடுவிலே | 2. நான் துன்பப்பட்டது ஸம்ஸார சாகரத்திலே |
| 3. கஜேந்திரன் துயரம் ஆயிரம் ஆண்டுகள் | 3. என் துன்பம் அநாதி காலம் |
| 4. ஒரு முதலையின் வாய்ப்பட்டது கஜேந்திரன் | 4. நானோ ஐம்புலங்களின் வாய்பட்டேன். |

கஜேந்திரன் துயரத்தை விட என் அல்லல்கள் மிகக் கொடியவை. ஆயினும் தானாக வந்து, என்னல்லல்களைத் தீர்த்து, தன் பேறாக என்னை ஏற்றருளினார் எம்பெருமானார் இங்கு என்கிறார்.

## பாசுர அர்த்தம்

மேகத்தையொத்த கருணையையுடைய எம்பெருமானாரே! நானோ துன்பங்களுக்கு இருப்பிடமாக உள்ளவன். அடியேனை, தேவரீர் ஏற்று அருளிய பின், தேவரீருடைய கல்யாண குணங்களே, அடியேன் ஆத்மாவுக்கு தாரகமாய், இப்பொழுது இனிக்கின்றன.தேவரீருடைய க்ருபையின் ஸ்வபாவத்தை, இந்த கடல் சூழ்ந்த உலகில் யார் தான் அறிவார்?

## பாசுரம்-26

திக்குற்றகீர்த்தி யிராமானுசனை* என் செய்வினயாம்
மெய்க்குற்றம்நீக்கி விளங்கிய மேகத்தை* மேவுநல்லோர்
எக்குற்றவாளரெது பிறப்பேதியல்வாக நின்றோர்
அக்குற்றமப்பிறப்பு* அவ்வியல்வே நம்மை ஆட்கொள்ளுமே.

### பாசுரக் கருத்து

இராமானுச பக்தர்களுடைய குலம், பிறப்பு, எவ்வித தோஷம் இருந்தாலும், அவர்கள் எல்லோரும் அப்படியே நமக்கு உத்தேச்யர்கள் என்று காட்டுகிறார்.

## பதவுரை

எக்குற்றவாளர்:

நாம் எவ்வளவு அறிவு கேடராயினும், இழிகுலத்தவராயினும், நடத்தையில் கெட்டவராயினும், எம்பெருமானரை மேவி வாழ்வதற்கு உரியவராகலாம்.

**பாசுர அர்த்தம்**

இராமானுசர், அடியேன் செய்த நிலையான குற்றங்களாகிய வினைகளை நீக்கி, அருள் செய்தார். திக்குகள் எல்லாம் புகழுடைய மேகம் போன்ற அவரை அண்டிய நல்லார்கள், எக்குற்றம் செய்தாலும், என்ன பிறப்புடையவர் ஆயினும், எவ்வியல்பு கொண்டவர் ஆயினும், முன்பு செய்த அவர்கள் குற்றமும் பிறவித் தாழ்ச்சியும், இயல்புகளும் நல்லதாகி நம்மை அடிமைப் படுத்த வல்லன.

## பாசுரம்-27

கொள்ளக்குறைவற்றிலங்கி* கொழுந்துவிட்டோங்கியவுன்
வள்ளல் தனத்தினால் வல்வினையேன் மனம் நீ புகுந்தாய்*
வெள்ளைச்சுடர்விடுமுன் பெருமேன்மைக்கிழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கும்* இராமானுச என் தனி நெஞ்சமே.

**பாசுரக் கருத்து**

இராமனுசரே! தேவரீர் ஈகைத் தன்மையால் அடியேனுடைய மனத்தில் புகுந்தீர். உம்முடைய தூய்மைக்கு இது குற்றமாயிற்றே என்று என் தனி நெஞ்சம் தளர்ந்து வருந்துகிறது என்கிறார்.

**பதவுரை**


கொழுந்து விட்டோங்கிய உன் வள்ளல் தனத்தினால்: இராமானுசன் என்னும் கார், தன் வள்ளல்தன்மையால் தன்னைக் காட்டி நான் கண்டு உயரும்படி செய்தது என்றார் கீழே.இங்கே காட்டியதோடு அமையாமல் , நெஞ்சத்திலே தன்னை நிரந்தரமாக நிலையாட்டியதன் மூலம் அவ்வள்ளல் தன்மை கொழுந்து விட்டோங்கினமை புலனாகிறது என்கிறார்.

## பாசுர அர்த்தம்

எம்பெருமனாரே! வேண்டுவோர் வேண்டியதைக் கொள்ளும்படி, குறைவுபடாது விளங்கி, கொழுந்து விட்டு ஓங்கும் தேவரீரிடைய கொடைத் திறத்தினால், பெரும்பாவியான எம் நெஞ்சிலே தேவரீர் புகுந்தருளீனீர். இது தேவரீருடைய அளவிறந்த பிரபாவத்துக்கு குறை என்று, என்னுடைய தனிப்பட்ட் மனமானது, தளர்ந்து ஈடுபடுகின்றது.

## பாசுரம்-28

நெஞ்சிற் கறைக்கொண்டக் கஞ்சனைக் காய்ந்த நிமலன்* நங்கள்
பஞ்சித் திருவடிப் பின்னைதன் காதலன்* பாதம்நண்ணா
வஞ்சர்க்கரியவிராமானுசன் புகழன்றி என்வாய்
கொஞ்சிப்பரவகில்லாது* என்ன வாழ்வின்று கூடியதே.



**பாசுரக் கருத்து**

நேற்று வரை அபத்தார்த்தமாய் கிடந்த அடியேன், இன்று சத்தைப் பெற்று வாய்ந்த அதிசயம் யாதெனில், எம்பெருமானுடைய குணகீர்த்தநத்தில் நேற்று வரை உதாசீனமாய் கிடந்த என் வாயானது,இன்று அவருடைய திவ்ய கீர்த்திகளையன்றி, வேறு ஒன்றையும் அநுஸந்திக்க மாட்டேனென்று, அது தன்னிலே ஊன்றி கிடக்கிறது.

## பதவுரை

பாதம் நண்ணா வஞ்சர்க்கரிய இராமானுசன்:
நப்பின்னையின் கணவனான கண்ணனின்

பாதங்களை,அடையாத வஞ்சகர்கள், இராமானுசரை அடைவதற்கு அரியவர் ஆவார்.

**பாசுர அர்த்தம்**

நெஞ்சில் கள்ளமுடைய கம்சனை முடித்தவனும், குற்றமற்றவனும், பஞ்சினும் மெல்லிய திருவடிகளையுடைய, நப்பின்னையின் கணவனும் ஆன கண்ணனின் பாதங்களை அடியாத வஞ்சகர்கள், இராமானுசரை அடைவதற்கு அரியவர் ஆவார். இத்தகைய சிறப்புடையவர் குணங்களை அன்றி, என் வாய் வேறு ஏத்தாது. இந்நாள் எப்படிப்பட்ட வாழ்வு கிட்டியது.

---